Diocese of Kurunagala

කුරුණෑගල දියෝකීසිය

குருநாகல் மறைமாவட்டம்

# Environment Policy

# පරිසර ප්‍රතිපත්තිය

# சுற்றுச்சூழல் கொள்கை

ஓப்புகை:

வண. ஜோஜ் மெல்டர், கலாநிதி. லக்மினி இலங்கசிங்க, பேராசிரியர் நேத்ரா கருணாரத்ன, திரு. செனரத் யடவர, திருமதி. என்ரியர் ஜோன், திரு கிங்ஸ்லி அந்தனிதாசன் வண. ரசிக அபேசிங்க மற்றும் குருநாகலை மறை மாவட்ட சுற்றாடல் சங்கத்தின் உறுப்பினர்கள்

மொழிப்பெயர்ப்பாளர்கள் : திருமதி. லக்தினி பண்டிதரத்ன, திரு சந்திர குமார்

குருநாகலை மறைமாவட்ட சுற்றாடல் கொள்கைக்கான சபை அங்கீகாரம் பெறுதல்

அ). குருநாகலை மறைமாவட்ட சுற்றாடல் குழுவினால் சுற்றாடல் குறித்த கொள்கைப் பிரகடனம் ஒழுங்கு செய்யப்படுதல்.

ஆ). குருநாகலை, அநுராதபுரம் ஆகிய இரண்டு பகுதிகளில் நடைபெற்ற பிரதேச மட்டத்திலான கூட்டங்களில் கலந்துரையாடி அங்கீகாரம் பெறப்படுதல். 2021 மே மாதம் நாடு முடக்கப்படுதலுடன் கண்டி பிரதேச கூட்டம் பிற்போடப்பட்டதன் காரணமாக கொள்கைப் பிரகடனம் அனைத்து அருட்பணியாளர்களுக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறப்படுதல்

இ). குருநாகலை மறைமாவட்ட நிலையியற் செயற் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்படுதல்.

குருநாகலை மறைமாவட்டத்தின் வருடாந்த மாமன்ற அமர்வின் போது குருநாகலை மறைமாவட்ட சுற்றாடற் கொள்கைப் பிரகடனத்தை அங்கீகரித்தலுக்கு உட்படுத்த வேண்டும் என குருநாகலை மறைமாவட்ட வருடாந்த மாமன்ற அமர்வின் உறுப்பினர்களான நாம் முன்மொழிகின்றோம்.

முன்மொழிவு - கலாநிதி நேத்ரா கருணாரத்ன

வழிமொழிவு - திரு. எஸ். யடவர

D. N. Karunaratne

Proposer : D.N. Karunaratne/Secy, Diocesan Environment Committee

Seconder : S. Yatawara / Council Member

## முன்னுரை

“ஆண்டவரே, உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை, நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர். பூவுலகம் உம் படைப்புகளால் நிறைந்துள்ளது.” (தி.பாடல் 104:24)

கிறிஸ்தவர்களாகிய நாம் தூய படைப்பினை மேலான பயன் என எண்ணுகின்றோம். இறை சாயலை கொண்டு படைப்பின் பாதுகாப்பு மற்றும் அதன் பொறுப்பினை ஆண்டவர் எமக்கு வழங்கியுள்ளார் எனும் விடயத்தினை நாம் தூய வேதாகமத்தின் ஊடாக கற்றுள்ளோம். இப் பாதுகாப்பு மனிதனுக்கு பாரிய பொறுப்பு மற்றும் கௌரவத்தினை பெற்று கொடுத்தாலும், மனிதன் அதை சரியாக புரிந்து கொண்டுள்ளான் என்பது படைப்பின் ஆரம்பத்திலிருந்தே எமக்கு புலனாகிறது. ஆகவே படைப்பு குறித்து எமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பானது பராமரிப்பு மாத்திரமா அல்லது பொறுப்பான சுற்றாடலை வளர்ச்சி பெறச்செய்து, பேணிப் பாதுகாக்கும் உக்கிராணத்துவமா எனும் விடயத்தினை ஆழமாக பகுத்தாய்வு செய்ய வேண்டியவர்கள் ஆகின்றோம்.

எம்மிடம் வழங்கப்பட்டுள்ள இறைப்படைப்பினை பாதுகாக்கும் விடயம் குறித்து வேறொருபோதும் இல்லாத அளவிற்கு அத்தியவசிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். உலகின் தென், வட துருவ கடல்கள் மற்றும் பனிப்பாறைகள் உறைதல், சுற்றாடலில் வெப்பம் அதிகரித்தல், விலங்கினம் அழிதல், குறித்து ஊடகங்களின் ஊடாக நாம் அன்றாடம் செவிமடுக்கின்றோம். இவ்விடயத்தின் பேரால் தீவிரமாக குரல் கொடுத்த கிரேக்க பாரம்பரிய சபையின் முற்பிதாவான முதலாவது பர்த்தலமியுஸ் மற்றும் தூய பிரான்ஸிஸ் பாப்பரசரின் பணிகளுக்கு மேலான மதிப்பளிக்க வேண்டியவர்களாகின்றோம். (உலக சுற்றாடலுக்கான பதிப்பொன்றை வெளியிடுதல்) உலக அங்கிலிக்கன் குரல் தமது பிரதான ஐந்து பிரிவுகளிலான பணிகளில் ஒன்றாக சுற்றாடலை பாதுகாத்தல் மற்றும் வளர்ச்சி பெறச்செய்தல் என்பதனை அடையாளம் கண்டுள்ளதோடு, 2010ம் வருடம் நடைபெற்ற லம்பத் மாநாட்டின் போதும் அத் தேவை அறியப்பட்டு சுற்றாடலுக்கான எமது அர்ப்பணிப்பு மற்றும் புதிய நோக்கினை கடமையாக எண்ணி நிறைவேற்ற எமக்கு அழைப்பு விடுக்கின்றது.

இலங்கை திருச்சபை குருநாகலை மறைமாவட்டம் கடந்த 70 வருட காலமாக சுற்றாடலுக்கு அனுகூலமான பணியொன்றுக்கு பங்களிப்பினை வழங்கும் போராட்ட உணர்வுடன் செயற்பட்டு வந்துள்ளதோடு, அதை உறுதி செய்து, 2021ம் வருடம் சீரான முறையிலான கொள்கை பிரகடனம் ஒன்றை உருவாக்கிக் கொள்ள கூடியமை விஷேடமானதோர் வெற்றியாகும்.




.



| | |
|---|---|
| ஆலயம் | கடவுளின் படைப்புகளுக்கு மதிப்பளிக்கும் விசேட இறைவழிபாடு ஒன்றுடன் சுற்றாடல் ஞாயிறை (ஜூன் முதலாம் வாரம்) நினைவு கூறுங்கள்.<br>வாலிபர் சங்கம் மற்றும் சிறுவர்களை உள்வாங்கி செயற் திறனுடன் கூடிய சுற்றாடல் குழுக்களை அனைத்து ஆலயங்களிலும் ஒழுங்கமைப்புச் செய்யுங்கள்.<br>தமது ஆலய சுற்றாடலுக்கு ஏற்றது என அறிமுகம் செய்து அதன் அனைத்து செயற்பாடுகளையும் சுற்றாடலுக்கு ஏற்ற உக்கிப்போகின்ற பொருட்களின் உபயோகத் திட்டமிடல். பொலிதீன், பிலாஸ்டிக்கிலான பொருட்களை தவிர்த்தல்<br>ஒரு சபையில் குறைந்த வருமானம் பெறும் உறுப்பினர்கள் இருப்பின் சுய தொழில்களை பயிற்றுவித்து மகளிர் சங்கத்தின் ஊடாக ஆடை நெய்தல், பிரம்புப்பின்னல், கடதாசிப் பைகள், பிடவைப் பைகள் செய்தல், சணல் கைத்தொழில், மட்பாண்டக் கைத்தொழில் போன்றவற்றுக்காக அவர்கள் உள்வாங்கப்படுதல்.<br>ஆலய அலங்காரங்களின் போது பொலிதீன் உபயோகங்களை தவிர்த்து, இயற்கையாக உக்கிப்போகின்ற பொருட்களை உபயோகித்தல்.<br>குருத்தோலை ஞாயிறன்று சிலுவைகளுக்காக உபயோகிக்கப்படும் குருத்தோலைகளுக்குப் பதிலாக தென்னை ஓலைகள் அல்லது ஏனைய இலைகளை உபயோகப்படுத்துங்கள். (குருத்தோலை, தென்னம் பூ, மற்றும் கமுகுப் பூக்களை வெட்டுவதன் மூலம் மரத்தின் விளைச்சல் மூன்று வருடங்களுக்கு அருகி விடுகின்றது).<br>தற்போதைய மின்சக்தி செயற்பாட்டுக்குப் பதிலாக சுற்றாடல் சார்ந்த சூரிய மின்சக்தியை உபயோகப்படுத்துங்கள்.<br>மின்கட்டணம் அதிகமாய் செலுத்தும் நிறுவனங்களுக்கு இது மிக ஏற்றதோர் செயல் முறைமையாகும். |
| குருமனை | வீட்டுத் தோட்டத்துடனான விரும்பத்தகு குருமனை ஒன்றை முன்கொண்டு செல்ல ஊக்கமளியுங்கள்.<br>குருமனை சூழவுள்ள வீட்டுத் தோட்டத்தினூடாக வருமானத்தினை அதிகரித்துக்கொள்ள ஊக்கமளியுங்கள். உK .<br>சரக்கு, மரக்கறி பயிர் மற்றும் பூக்கள். |
| அருட்பணியாளர் மற்றும் உதவி அருட்பணியாளர் | சுற்றாடலுக்கு ஏற்ற சடங்குகள் குறித்து அடிக்கடி சபையோருக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல், கற்றுக் கொடுத்தல். கடவுளின் படைப்பின் பொறுப்பாளராக ஆன்மீக வளர்ச்சியினை ஏற்படுத்திக் கொள்ளல். |
| ஆலய செயற்குழு, சுற்றாடற்குழு, ஓய்வுநாட் பாடசாலை, வாலிபர் சங்கம், மகளிர் சங்கம் மற்றும் ஏனையவை | ஆலய வளவின் சுற்றாடலை பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.<br>நேர் மறை சிந்தனைகளின் ஊடாக சுற்றாடலுக்கு ஏற்ற வழிவகைகளை கையாளுகின்ற, பொறுப்பேற்கின்ற சபையோர் ஆகுதல்.<br>சுற்றுவட்ட சூழலை ரம்மியமாக வைத்துக் கொள்ளல். பூ வளர்ப்பின் மூலம் சுற்றாடலை அழகுபடுத்துதல் மற்றும் வருமானம் பெறுகின்ற தாவரங்களை வளர்த்தல்.<br>ஆலய விசேட நாளொன்றுக்காக மரக்கன்று ஒன்றை நடுதல். எதிர் காலத்திற்காக அம் மரத்தை பெயரிடுதல். (தாவரவியல் பெயர் மற்றும் திகதி) |

**பின்னிணைப்பு – 1**

## நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் ஏனைய தரப்பினர்






இதனூடாக நோக்கும்போது உலகின் பல செல்வந்த நாடுகளின் மறைமாவட்டங்களை பார்க்கிலும் நாம் எமது தரிசனத்தில் முன்னிலை வகிப்பதோடு, கீழ்மட்ட மக்கள் முதல் பேராயர்கள் வரை இந்த பிரகடனத்தினை கற்று, உரையாடலுக்கு உட்படுத்தி தொகுப்பதற்கு கூடியமை பெரும் வெற்றியாகும். 2021 அக்டோபர் மாதம் 30ம் திகதி நடைப்பெற்ற எமது மறைமாவட்டத்தின் 65வது மாமன்ற அமர்வில் இப்பிரகடனம் பெரும்பான்மை அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டது. இவ்வாறானதோர் ஆழமான பிரகடனத்தை உருவாக்க தோள் கொடுத்த எமது மறைமாவட்ட அதிவண கீர்த்தி சிரி பெர்னாந்து பேராயர் அவர்கள் மற்றும் சுற்றாடல் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினை கூறுகின்றோம். குழு செயற்பாட்டு உணர்வுடன் எமது மறைமாவட்டத்தின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்களாக ஆலய நிலம் மற்றும் ஏனைய இயக்கங்களின் ஊடாக பயனளிக்கும் நந்தவனமாக உபயோகப்படுத்தவும், சுற்றாடலுக்கு ஏற்றவைகளை வளர்ச்சி பெற செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட உரையாடல் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளின் இறுதி முடிவாகவும் விசேடத்துவம் மிக்கதோர் கொள்கை பிரகடனம் உருவாக்கம் பெற்றது.

கொள்கை பிரகடனம் ஒன்று இருந்தமட்டில் எமது சுற்றாடல் சீரமைக்கப்படுமா என்பது குறித்து செயற்திறனுடன் கற்றுக்கொண்டு, அதன்மூலம் நவீன உலகிற்கு ஏற்றவாறு உருவாக்கிக் கொள்ளும் திறன்மிக்கதோர் செயற்பாட்டிற்கு வழிகாட்டப்பட்டுள்ளதோடு, முன்னெடுப்புகளின் போது ஆலயப் பகுதிகளில் சுற்றாடற் குழுக்களை நிறுவுதல், ஆலய நிலங்களை அழகுபடுத்துதல் மற்றும் வருமானம் பெறக்கூடிய வகையில் அபிவிருத்தி செய்தல் ஆகிய செயற்பாடுகளின் மூலம் சிறந்த பயன்களை பெற்றுக்கொள்ள நாம் எதிர்ப்பார்க்கின்றோம்.

இச்செயற்பாடானது தூய வார்த்தையில் அடங்கியுள்ள சுற்றாடல் குறித்த அபிமானத்தை நிறைவேற்ற மேற்கொள்ளப்படுகின்றதோர் சிறு முயற்சியாவதோடு, எமது மறைமாவட்ட அனைத்து நிறுவனங்களிலும் இதை செயற்படுத்தவும், எதிர்கால சந்ததியினர் சுற்றாடலை பேணிப் பாதுகாக்கும் விடயமாக அவர்களை ஊக்கப்படுத்தக்கூடியதாகவும் இவ்விடயம் அமையும்.

‘‘பாதுகாவல்’’ எனும் பொறுப்பினை தவறாக வரைவிலக்கணப்படுத்திக் கொண்டு நாம் செல்லுகின்ற பாரம்பரிய பயணத்தை இடைநிறுத்திவிட்டு, சுற்றாடலுக்கு அனுகூலமான அபிவிருத்தி செயல்முறைகளுக்கு உட்படுவதே நடைமுறை சவால் ஆகும். அவற்றை பாதுகாப்புடன் எதிர்கால சந்ததியினரிடம் ஒப்படைப்பதே எம் ஒவ்வொருவரினதும் கடமையுமாகும்.

வந்தனைக்குரிய ஜோர்ஜ் மெல்டர்
குருமுதல்வர் - குருநாகலை மறைமாவட்டம்.

குருநாகலை பேராயர் மற்றும் இலங்கை திருச்சபை தலைமைத்துவ பேராயரின் செய்தி

"ஆண்டவரே, வானங்கள் உம் வியத்தகு செயல்களை புகழ்கின்றன. தூயவர் குழுவில் உமது உண்மை விளங்கும். வானமும் உமதே, வையமும் உமதே பூவுலகையும் அதில் நிறைந்துள்ள அனைத்தையும் நிலைநிறுத்தியவர் நீரே!" (திருப்பாடல்கள் 80 : 5,11)

ஆண்டவரின் நற்படைப்புக்கு பொறுப்பான சகோதர சகோதரிகளே,

"சுற்றாடலுக்கு நாம் தேவையற்றவர்கள், ஆனால் சுற்றாடல் எமக்கு தேவையானது" எனும் கூற்றினை நாம் செவிமடுத்துள்ளோம். அண்மைக்காலமாக மனிதர்களினால் சுற்றாடலுக்கு ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தலான பேரிடர்களை காணும் போதும், கேட்கும் போதும் மற்றும் அதன் பிரதிபலன்களை அனுபவிக்கின்ற போதும் இக்கூற்றானது வேறொறு போதும் இல்லாத அளவிற்கு எம் அனைவருக்கும் அனுகூலமாகின்றது.
எமது நம்பிக்கைக்கு அமைய இவ்வியத்தகு சுற்றாடலை பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்றிருக்கும் மனிதர்கள், அவர்களின் வசிபாகத்தினை மறந்து, அபிவிருத்தி மற்றும் வள சுரண்டல்களின் பின்னால் ஓடினர். இவ்விடயமானது எம்மால் மறந்து, ஒத்திவைத்து புறம் தள்ள முடியாததோர் உண்மையாகும். ஓர் திருச்சபையாக, இனமாக மற்றும் நபராக நாம் பாவம் செய்துள்ளோம் என்பதை புரிந்துகொள்ளல் வேண்டும்.

ஆண்டவரின் படைப்புகளின் பாதுகாப்பு மற்றும் நின்று நிலைக்கும் தன்மைக்கான பொறுப்பு, செயற்பாடுகளுடன் வசிபாகத்தினை புரிந்துகொள்ள நாம் இப்போது செயற்பட வேண்டும். படைப்பின் தொடர்சியினை பாதுகாக்கவும், பூமியின் உயிர்களை முன்கொண்டு செல்லவும், புதுப்பிக்கவும் முயற்சியினை மேற்கொள்கின்ற அங்கிலிக்கன் திருச்சபையின் ஐந்தாம் பணி அடையாளத்தை புரிந்துகொண்டு, இயற்கை எழிலின் ஊடாக அமைத்துக் கொண்ட இவ் எண்ணத்தை எமது கொள்கைக்காக, எமது சபைகளுடன் இணைந்து மறைமாவட்டமாக அர்ப்பணிப்பு செய்வோமாக.

.



3. தமது பணிக்காலத்தில் தான் வசிக்கும் இல்லம் மற்றும் சூழவுள்ள சுற்றாடலைஊக்கத்துடன் பராமரித்தல், பயிர்ச் செய்கையை மேற்கொண்டு முன்னேற்றமடையச் செய்தல்.

**முன்னெடுத்தல்**

1. பழங்கள், மரக்கறி போன்ற பிரயோசனம் மிக்க விவசாயப் பயிர்களை நடுவதில் ஆர்வம் காட்டுங்கள்.
2. தமது இல்லத்தின் அழகை பேணுவதற்கு பூச் செடிகளை நடுவீர்களாக.
3. குருமனை மற்றும் இல்லத்தில் இருக்கும் காலத்தில் இது ரம்மியமான இல்லம் எனும் உணர்வினை ஏற்படுத்த ஆவண செய்தல்.
4. ஒலி மாசடைதலினால் அயல் வீடுகளுக்கு ஏற்படும் தொல்லைகளை தவிர்த்தல்.
5. ஆலய செயற் குழு மற்றும் சுற்றாடல் செயற்குழு உறுப்பினர்கள் சுற்றாடற் கொள்கைகளை செயற்படுத்த அவர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

**திட்டமுறைமை - 5d**
சபையினருக்கான கைப்பணி மற்றும் வீட்டுத் தோட்ட வேலைத்திட்டங்கள் நடாத்தப்படுதல்.

சவால்கள்
- சுயதொழில் செயற்திட்டமாக கைப்பணிகளை கற்றுக் கொடுத்தல்.
- வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கையை வருமானம் பெற்றுத் தருமோர் வழியாக அமைத்துக் கொள்ளுதல்.

**முன்னெடுத்தல்**

1. வீடொன்றை நிர்மாணிக்கும் போது சுற்றாடலுக்கு ஏற்ற பொருட்களை உபயோகப்படுத்துங்கள். உ+ம் சீமெந்துக் கற்களுக்குப் பதிலாக செங்கற்களை உபயோகித்தல்.
2. கைப்பணி உருவாக்குதலுக்கு இயற்கையான பொருட்களை உபயோகித்தல். உ+ம் செய்தித்தாள், பிரம்புப் பொருட்கள் மற்றும் தும்பு,
3. சிறுவர்களை வீட்டுத்தோட்ட நிகழ்ச்சிகளில் பங்களிப்புச் செய்வித்து வீட்டுத் தோட்டப் பயிர் செய்கைக்கு பழக்கப்படுத்துதல்.
4. நீரை சேகரிக்க குவளையையும், சமையலுக்கு மட்பாண்டங்களையும் உபயோகித்தல்.
5. ஆலயம் மற்றும் இல்லங்களை சுற்றாடலுக்கு ஏற்ற நிறுவனங்களாக முன்கொண்டு செல்லல்.

**சவால்கள்**

- அருட்பணியாளர்களுக்கு சுற்றாடற்சார் கல்வியினை பெற்றுக் கொடுப்பதன் மூலம் சூழலுடன் இணைந்து அதைப் பேணி ஒத்துழைப்புடன் செயற்படுவது குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
- கல்லூரி மற்றும் ஓய்வுநாட் பாடசாலை சிறுவர்களுக்கு சுற்றாடலை அனுபவிக்கவும் அதற்கு மதிப்பளிக்கவும் கற்றுக் கொடுத்தல்.
- சுற்றாடலுக்கு ஏற்ற பொருட்களின் உபயோகம் குறித்து அனைத்து தருணங்களிலும் சிறுவர்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்துங்கள். உ+ம் பொலிதீன் கொண்டு பொதி செய்யப்பட்ட உணவு வகைகளுக்குப் பதிலாக உணவுப் பெட்டிகளை உபயோகித்தல்

பிலாஸ்டிக் உபயோகத்திலிருந்து விடுவித்தல். அதற்குப் பதிலாக சுற்றாடலுக்கு ஏற்ற பொருட்களை உபயோகித்தல்.

**முன்னெடுத்தல்**

1. சுற்றாடல் குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்கு கீழ் காணும் அரச உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளுங்கள். (கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கல்லூரி ஆசிரியர்கள், விவசாய மற்றும் வனவள திணைக்கள உத்தியோகத்தர்கள்)
2. இயற்கை அழகியலை காண சுற்றுலாக்களை ஒழுங்கமைப்பு செய்வதன் மூலம் சுற்றாடலை அனுபவிக்கவும் அதற்கு மதிப்பளிக்கவும் ஆவண செய்தல்.
3. மாணவர்களிடம் சுற்றாடல் குறித்த செயற்பாடுகளை முன்னேற்றம் அடையச் செய்யும் இலக்கு மீள் சுழற்சி மற்றும் முகாமைத்துவம் குறித்த செயற் திட்டங்களை வீட்டிலிருந்தே ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளல்.
4. சிறுவர்களின் ஆன்மீக வளர்ச்சியினை மேம்படுத்தும் விடயமாக கடவுளின் படைப்பின் வியப்பினை அடிக்கடி சிறார்களின் மனதில் பதிய வைத்தல்.

**திட்டமுறைமை - 5c**

ஆலயம், குருமனை, கல்லூரி மற்றும் ஏனைய நிறுவனங்களின் சுற்றாடல் புலத்தின் முறைமைகளை பராமரித்தல்.

**குறிக்கோள் - 5c**

1. வீட்டுத் தோட்டம் விடயமான நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
2. சூழவுள்ள சுற்றாடலின் எழில் மற்றும் தூய்மைத் தன்மையை பாதுகாத்துக் கொள்ளல்.



மறைமாவட்ட சுற்றாடல் செயற்குழுவின் அர்ப்பணிப்புடன் ஆண்டவரின் நற்படைப்புக்காக உபசாரம் செய்யும் இறைப்பணி, சுற்றோட்டம், பிரதிபலிப்பு என்பவற்றை செயற்படுத்தவும், முன்கொண்டு செல்லவும் நாம் இப்போது மறைமாவட்டத்தின் சுற்றாடல் கொள்கை பிரகடனத்தை உங்கள் முன்வைக்கின்றோம்.

பிரதேச மட்டத்தில் கலந்துரையாடப்பட்டு, மீளாய்வுடன் தயாரிக்கப்பட்டுள்ள இக்கொள்கை பிரகடனம் 2021ம் வருடம் ஒக்டோபர் மாதம் 30ம் திகதி நடைபெற்ற மாமன்ற பேரமர்வின் போது முன்மொழியப்பட்டதுடன், அதை ஏகமனதாக ஏற்றுக்கொண்டு, பொறுப்பேற்றலுக்கான எமது அர்ப்பணிப்பு மற்றும் மறைமாவட்ட அனைத்து பணிகளுக்கானதோர் வழிகாட்டியாக விருப்பம் தெரிவித்து இத்தால் அனுமதி அளிக்கின்றோம்.

எமது படைப்பாளர், போஷகர், தூய்மையாளரான ஆண்டவரின் அமைதி, எம்மை இயக்கும், வழுப்படுத்தும், ஆண்டவர் படைப்பின் தொடர்ச்சியினை ஆரோக்கியம் பெற செய்யும் மற்றும் மீளமைக்கும் கருவிகளாக மாறட்டும்.

**அதிவண கீர்த்திசிரி பெர்னாந்து**
**குருநாகலை மறை மாவட்டம்**

2021 வருட பரி. அந்திரேயா தினம்

## சுற்றாடற் கொள்கை

பொருளடக்கம் பக்கம்


தொகுதி - **A** சுருக்கம் 7
I. முன்னுரை 8
II. கொள்கை அபிவிருத்தி 8
III. கொள்கை நடைமுறைப்படுத்தல் 8
IV. கொள்கை குறிக்கோள் மற்றும் திட்டமுறைமைகள் 9

தொகுதி - **B** மறைமாவட்ட சுற்றாடற் கொள்கை

குறிக்கோள், திட்டமுறைமை, சவால் மற்றும் முன்னெடுத்தல் 11

சுற்றாடற் கொள்கையின் குறிக்கோள் - 1 12

சுற்றாடற் கொள்கையின் குறிக்கோள் - 2 13

சுற்றாடற் கொள்கையின் குறிக்கோள் - 3 15

சுற்றாடற் கொள்கையின் குறிக்கோள் - 4 17

சுற்றாடற் கொள்கையின் குறிக்கோள் - 5 18

பின்னிணைப்பு 22
பின்னிணைப்பு 23




**திட்டமுறைமை - 5a**

சுற்றாடல் தினத்தினை கடவுளுக்கு துதி தோத்திரம் செலுத்தும் வழிபாட்டுத்தினமாக அனுஷ்டித்தல்.**சவால்கள்**

- இயற்கையாகவே அழகினை கொண்டுள்ள இந்த ரம்மியமான தீவினைக் குறித்து கடவுளுக்கு மகிமையுடன் கூடிய நன்றிகளை ஏறெடுங்கள்.
- அனுகூலமான ஆரோக்கிய சுற்றாடலின் ஊடாக கிடைக்கின்ற பிரதிபலன்கள் குறித்த அறிவினை சபை மக்களுக்கு பெற்று கொடுங்கள்.
- துறைசார் நிகழ்ச்சிகள், அழகியல் தொடர்பான சுற்றுலாக்கள், செயற்திறனுடனான நிகழ்ச்சிகள் ஊடாக அன்றாடம் எமக்கு கிடைக்கின்ற சூரிய ஒளி, சுத்தமான காற்று, குடிநீர் மற்றும் ஏனைய அளவில்லா ஆசீர்வாதங்கள் குறித்து மதிப்பளிப்பதற்காக ஆவண செய்தல். உ+ம் வாலிபர் சங்கம் மற்றும் சிறுவர்களை சுற்றாடல் தொடர்பான செயற்திறன் கொண்ட செயற்பாடுகளில் பங்களிப்பு செய்வித்தல்.

**முன்னெடுத்தல்**

1. ஜூன் மாதம் முதலாம் வாரத்தில் அனைத்து ஆலயங்களிலும் சுற்றாடல் ஞாயிறு கொண்டாடப்படல்.
2. அனைத்து ஞாயிறன்றும் மக்கள் மன்றாட்டின் போது சுற்றாடல் குறித்த சுருக்கமான வார்த்தைகளை சேர்த்துக் கொள்ளல்.
3. ஓய்வுநாட் பாடசாலையின் போது சுற்றாடலின் குணாதிசயங்கள் மற்றும் பெறுமதிகள் குறித்து ஐந்து நிமிட உரையாடல் ஒன்றை மேற்கொள்ளல்.
4. ஆலயம், நிறுவனம், இல்லம் என்பவற்றில் திருமுழுக்கு, திடப்படுத்தல், பிறந்த தினம் போன்ற விசேட நாட்களில் ஞாபகார்த்தமாக மரக்கன்று ஒன்றினை நடுதல். அது ஓர் விசேட தாவரம் என பராமரிக்க சிறுவர்களுக்கு கற்றுக் கொடுத்தல்.

**குறிக்கோள் - 5b**

சுற்றாடற்சார் கல்வி நிகழ்ச்சிகளை கல்லூரி மற்றும் ஓய்வுநாட் பாடசாலைகளில் செயற்படுத்துங்கள்.

2. வன விலங்குகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் அதன் பெறுமதிகள் குறித்த கற்கைகளை மேற்கொள்ளல்.

**திட்டமுறைமை - 4b**

இயற்கையான வாழ்க்கை முறைகளை அழிப்பதை தவிர்த்து தாவரம் மற்றும் விலங்கியல் வாழ்க்கைக்கான அவகாசத்தை பெற்றுக் கொடுக்க உறுதி கொள்ளுதல்.

**சவால்கள்**

- வனாந்திரம் என்பது காப்புக் காடாகும், எதிர்கால சந்ததிக்காக அவற்றை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
- வியாபார ரீதியான விடயங்களுக்காக மரம் வெட்டுதலை தவிர்த்துவிலங்குகளின் இயற்கையான இருப்பிடங்களை அவ்வாறே வைத்து விடுங்கள்.
- உயிரியற் பல்வகைமையை பாதுகாத்துக் கொள்ள சுற்றாடல் புலத்தை அழிக்காமல் அவ்வாறே முன்கொண்டு செல்லல்.
- மரம் என்பது விலங்குகள் மற்றும் பறவைகளின் இருப்பிடமாகும்.
- அனைத்து விதைகளையும் பூமியை நோக்கி எறிந்துவிடுங்கள்.

**முன்னெடுத்தல்**

1. மரத்தை வெட்டாமல் ஏற்ற காலத்தில் கவ்வாத்து செய்வதன் மூலம் நீண்ட காலம் அவை பேணி பாதுகாக்கப்படும்.
2. பறவைகள் மற்றும் விலங்குகள் அடிக்கடி நடமாடும் பிரதேசங்கள் பாதுகாக்கப்படுதல்.
3. அழிந்து போகின்ற தாவரங்கள் மற்றும் அறியவகை தாவரங்களை பாதுகாத்தல்.
4. வியாபார விடயங்களுக்காகவும், மானிட தேவைகளுக்காகவும் காடுகள் வெட்ட வெளியாக்கப்படுவது தவிர்க்கப்படல்.

விதை என்பது பூமிக்கு சொந்தமான படைப்பாகும். அவற்றை கழிவுப் பாத்திரங்களில் போட வேண்டாம். மண்ணுக்கே எறிந்து விடுங்கள்.

**குறிக்கோள் - 5**

சுற்றாடலுக்கு மதிப்பளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல்.



# தொகுதி - A

## சுருக்கம்

## முன்னுரை, கொள்கை அபிவிருத்தி, கொள்கை நடைமுறைப்படுத்தல், கொள்கை குறிக்கோள் மற்றும் திட்டமுறைமை

I. முன்னுரை

கடவுளின் படைப்பு மற்றும் அதன் வியப்புத் தன்மை குறித்து வேதாகமத்தின் தொடக்க நூல் முதல் புதிய ஏற்பாடு வரை சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதிலுள்ள நடுநிலைத்தன்மை எமக்கு சாட்சி பகர்கின்றன. இப்படைப்பின் பொறுப்பானது மானிட சமூகமான எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் அதை பராமரிக்கும், பாதுகாக்கும், போசிக்கும் பொறுப்பு குறித்து கிறிஸ்தவ சமூகத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவது நடைமுறைக்கு தேவையானதோர் முக்கிய விடயம் என்பதும் இரகசியமானதல்ல.

II. கொள்கை அபிவிருத்தி

குருநாகலை மறைமாவட்ட சுற்றாடற் செயற்குழு 20 வருடங்களுக்கும் அதிகமான காலத்தினை கடந்து செல்ல வேண்டியுள்ளது. எமது ஆலய கிறிஸ்தவ சமூகம் பல்வேறு வழிமுறைகளிலான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் விடயங்களை மேற்கொண்டு வருகின்றன. இக் கொள்கை அபிவிருத்தி என்பது அவ்வாறான தேர்ச்சி மற்றும் அனுபவங்களினூடாக திட்டமிடப்பட்டதாகும். இதனை இலக்காகக் கொண்ட முறைகளது பல்வேறு பிரிவுகளில் சுற்றாடலுக்கு ஏற்ற சடங்குகளுக்காக கிறிஸ்தவ மக்கள் செயற்பட வேண்டிய வழிமுறைகள் இதுவாகும். சுற்றாடல் கொள்கைகள் அபிவிருத்தியடைவதற்கு சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகளை மக்கள் நன்கு அறிந்திருப்பது மிக முக்கிய விடயம் என புலப்படுகின்றது.

III. கொள்கை நடைமுறைப்படுத்தல்

சுற்றாடல் கொள்கைகளுக்காக செயற்பட அடிப்படையாக அமைவது, சுற்றாடலுக்கு பொருத்தமான துறையாகும். கொள்கை மற்றும் திட்டமுறைமைகளின் ஊடாக இவை நடைமுறைப்படுத்தப்படுகின்றன. குருநாகலை மறைமாவட்டப் பேராயர் மற்றும் நிலையியற் குழு, செயற்குழு, சுற்றாடற் குழு ஆகியன இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்த சார்ந்துள்ளனர். அனைத்து திருச்சபைகளினதும் அருட்பணியாளர்கள், திருமறைப் பணியாளர்கள், ஆலய அங்கத்தினர் ஆகியோரினால் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் அதன் மேற்பார்வை தொடர்பான பணியினை நிலையியற் செயற் குழு பொறுப்பேற்கும். பின்னிணைப்பு 1 இல் தனிநபர்/ இயக்கங்கள்/ குழுக்கள் என்பவற்றின் குறிக்கோள் மற்றும் திட்டமுறைமைகள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.



முன்னெடுத்தல்

1. மீள் சுழற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைப்புச் செய்யுங்கள். உக்கிப் போகாத பொருட் பாவனையை குறைத்துக் கொள்ளுங்கள். மீண்டும் உபயோகப்படுத்துங்கள். மீள் சுழற்சியினை மேற்கொள்ளுங்கள்.
2. குப்பைக் கூழங்களை வேறுபடுத்தி சேகரிப்பதற்காக வெவ்வேறான பாத்திரங்களை வழங்குங்கள். உ+ம்: பிலாஸ்டிக், செய்தித் தாள், வெளியேற்றப்படும் உணவுப் பதார்த்தங்கள்.
3. வண்ணத்துப் பூச்சி, தேனீக்கள் மற்றும் பறவைகளைக் கவரக்கூடிய பூக்கள் பூக்கும் தாவரங்கள், கன்றுகளை நடுங்கள்.
4. அதிகளவிலான பூக்கள் பூக்கும் தாவரங்களுக்கு இரசாயனத் திரவியம் தெளிப்பதை தவிர்க்கவும். மகரந்த சேர்க்கையில் ஈடுபடுகின்ற வண்டுகள் இதன் மூலம் அழிந்து விடலாம்.
5. இயற்கையான தாய் தாவரங்களை அழிக்கின்ற செயல் முறையான மரபனு தொழில் நுட்பத்தின் மூலம் உருவாக்கப்படுகின்ற விதை உபயோகத்தினை தவிர்க்கவும்.

குறிக்கோள் - 4

சுற்றாடல் புலம், உயிர்ப் புலம் மற்றும் விசேட விலங்கியல் தொகுதி பாதுகாப்பு

திட்டமுறைமை - 4a

திட்டமுறைமையின் ஊடாக மனித மற்றும் விலங்குகளுக்கிடையில் ஏற்படும் மோதல்களை குறைத்தல்.

சவால்கள்

- விலங்குகள் ஊருக்குள் ஊடுருவுவதை தடுத்தல்.
- விலங்கு வேட்டையை நிறுத்துதல்.
- விலங்கு மற்றும் பறவைகளுக்குரிய இடங்களை அனுமதியின்றி கைப்பற்றுவதை நிறுத்துதல்.

முன்னெடுத்தல்

1. விலங்குகளை ஈர்க்கும் கவர்ச்சிகர விடயங்களிலிருந்து விடுபட்டு சரியானகுப்பைக்கூழ முகாமைத்துவம் குறித்த கல்வியின் ஊடாக மக்களிடம் விளிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பு செய்தல்.

- மண்ணை வளப்படுத்தும் தாவரங்களை நடுதல்.
- இயற்கையாக உக்கிப்போகும் பொருட்கள் உபயோகத்தின் மூலம் மண்ணின் வளத்தை அதிகரித்தல்.

உக்கிப்போகாத பொருட்களை மீள் சுழற்சி செய்தல் மற்றும் திண்ம கழிவுப் பொருட்களை சரியான முறையில் முகாமைத்துவப் படுத்துதல்.

**முன்னெடுத்தல்**

1. அவரை இனப் பயிர்த் தாவரம் அதாவது லெகுயிம்னோசி இன தாவரத்தை மண்ணை வளமூட்டுவதற்காக உபயோகித்தல்.

2. கொம்போஸ்ட் பசளை தயாரிப்பதற்காக வீட்டிலிருந்து வெளியேற்றப்படும் உக்கிப் போகின்ற கழிவுப் பொருட்கள் மற்றும் செய்தித் தாள்களை உபயோகித்தல்.

3. மண்ணை வளமூட்டுவதற்காக கால்நடை கழிவுப்பொருட்களான மாட்டுச் சாணம், கோழிக் கழிவுகளை உபயோகித்தல்.

4. வளமான மண்ணை கன்றுகளை நடுவதற்கு மாத்திரம் உபயோகியுங்கள் நிர்மாணப் பணிகளுக்கு உபயோகிக்க வேண்டாம். வளமற்ற மண்ணை நிர்மாணப பணிகளுக்கு உபயோகியுங்கள்.

5. வெளியேற்றப்படுகின்ற தயாரித்த உணவு வகைகள் அல்லது விற்பனை நிலையங்களிலிருந்து பெற்றுக் கொண்ட அதிகளவிலான உணவு பதார்த்தங்களினால் கழிவுகள் ஏற்படுவதை தடுத்துக் கொள்ளல். தேவையான அளவிற்கு மாத்திரம் பழக்கப்படுத்திக் கொள்ளுதல்.

**திட்டமுறைமை - 3c**

இயற்கையான சுற்றுச் சூழலின் அழகைப் பாதுகாத்தல்.

**சவால்கள்**

- கழிவுப் பொருட்களை போடுதல் மற்றும் வீசி எறிதலின் மூலம் சூழல் மாசடையச் செய்வதை தவிர்த்தல்.

- இயற்கை சூழலை அழிவடையச் செய்யாமல் அவ்வாறே பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதில் சீவிக்கின்ற வன விலங்குகள் மற்றும் பறவைகளுக்காக அச்சூழலை இட்டு வையுங்கள். இதைக் குறித்து சிந்தித்து செயற்படுங்கள். இது அவைகளின் தாய் நாடு என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

- அனுமதி இல்லாமல் காடுகள் கைப்பற்றுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.



## IV. கொள்கை குறிக்கோள் மற்றும் திட்டமுறைமைகள்

**கொள்கை குறிக்கோள் – 1**

மக்களின் ஆரோக்கிய நடைமுறைகளுக்காக வாயு மண்டல காற்றின் தூய்மைத் தன்மையை முன்கொண்டு செல்லும் விடயத்தில் உறுதி கொள்ளுதல்.

**திட்டமுறைமைகள்**

A. காற்றின் தூய்மையை பாதுகாத்துக் கொள்ள மர நடுகையினை மேற்கொள்ளுதல்.
B. வளர்ந்த மரங்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக குறித்த காலத்தில் கவ்வாத்து பண்ணுதல்.
C. சூரிய மின்சக்தி உபயோகத்திலான அபிவிருத்தி.
D. அசுத்தக் காற்று சுற்றாடலில் கலப்பதை கட்டுப்படுத்துதல்.

**கொள்கை குறிக்கோள் – 2**

சுத்தமான நீரை தொடர்ந்தும் வழங்குதல்.
திட்டமுறைமைகள்

A. நீர்த் தோற்றுவாய் பகுதிகளை பேணிப்பாதுகாப்பதன் மூலம் கிடைக்கும் நீரை சிக்கனமாக உபயோகித்தல்
B. நீர் மாசடைதலை குறைத்துக் கொள்ளுதல்.

**கொள்கை குறிக்கோள் – 3**

செழிப்பானதோர் அருவடைக்காக இயற்கையாக மண்ணை வளப்படுத்துதல்.
திட்டமுறைமைகள்
A. ஈர நிலங்களை அவ்வாறே பேணுதல். மற்றும் மண் நிரப்புதலை தவிர்த்தல்.
B. மண் வளத்தை பெருக்குவதற்காக இயற்கை வழிமுறைகளின் பாவனை மற்றும் கழிவுப்

பொருட்களை நேர்த்தியான முறையில் முகாமைத்துவப்படுத்தல்.

C. சுற்றுச் சூழலில் அமைந்துள்ள இயற்கை எழிலை அவ்வாறே முன்கொண்டு செல்லுதல்.

**கொள்கை குறிக்கோள் – 4**

சுற்றாடல் புலம், உயிரியற் பல்வகைத் தன்மை மற்றும் விலங்கியல் விசேட பாதுகாப்பு.

**திட்டமுறைமைகள்**

A. மனிதன் மற்றும் விலங்குகளுக்கிடையில் நடைபெறும் மோதல் தவிர்ப்புக்கான திட்ட முறைமைகளை வகுத்தல்.

B. விலங்கு மற்றும் தாவரங்கள் வாழ்கின்ற இயற்கை சூழலிலான புலத்தை அழித்து ஒழிக்காமல் புவிசார்ந்த அவர்களின் நிலைத்தலுக்காக உள்ள தாய் நாட்டை பாதுகாக்க அவகாசம் வழங்குதல்.

**கொள்கை குறிக்கோள் – 5**

சுற்றாடலுக்கு ஏற்ற நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைப்புச் செய்வது.
திட்டமுறைமைகள்

A. சுற்றாடல் தினத்தை கொண்டாடும் விடயமாக அனைத்து ஆலயங்களிலும் துதி தோத்திர வழிபாடுகளை நடாத்துதல்.

B. சுற்றாடற் கல்வி குறித்த நிகழ்ச்சிகளை ஓய்வுநாட் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளில் செயற்படுத்துதல்.

C. ஆலயம், குருமனை, பாடசாலை மற்றும் ஏனைய இடங்களில் சுற்றாடல் பு லத்தை பராமரித்தல்.

D. சபை மக்கள் சமூகத்திற்கு பயிர்ச் செய்கையின் பெறுமதிகள் மற்றும் அதன் மூலம்

பெறப்படுகின்ற சுத்தமான, போசாக்குள்ள மரக்கறி மற்றும் பல வகைகள் குறித்த செயற்பாட்டுடன் கூடிய நிகழ்ச்சிகளை நடாத்துதல்.



**குறிக்கோள் - 3**

கூடிய விளைச்சலை பெற்றுக் கொள்ள நிலத்தினை வளப்படுத்துங்கள்

**திட்டமுறைமை - 3a**

நேர்த்தியான நில உருவாக்கத்தை முகாமைத்துவப்படுத்தி நீர் பிசைவுகளை வளர்ச்சி பெறச் செய்தல்.( மண் மற்றும் ஈர நிலங்கள்) விவசாய நிலங்களை பாதுகாத்தல் மற்றும் இயற்கை முறைமையிலான வளப்படுத்தல்.

**சவால்கள்**

- மண்ணரிப்பினை தடுத்தல்.
- மண்ணின் உறுதிப்பாட்டை முன்கொண்டு செல்லல்.
- வளமான மண்ணை விவசாயத்திற்கு உபயோகப்படுத்தல்.'.
- வெள்ளப் பெருக்கினால் பாதுகாப்புப் பெற நீரை உறிஞ்சும் ஈர நிலங்களை பாதுகாத்துக் கொள்ளல்.

**முன்னெடுத்தல்**

1. மண்ணின் நிலையற்ற தன்மையை தடுப்பதற்காக ஏற்ற மரங்களை வளர்த்தல்.
2. சரிவான இடங்களில் மண்சரிவினை தடுப்பதற்கு ஏற்ற வாய்க்கால் வரம்புகளை அமைத்து புற்களை வளர்த்தல்.
3. வெள்ளப் பெருக்கினை தடுப்பதற்கு ஈர நிலங்களை நிரப்புதல், அதில் விவசாயம் மற்றும் கட்டிடப் பணிகள் மேற்கொள்வதை தவிர்த்தல்.

**திட்டமுறைமை - 3b**

மண்ணை வளமாக்குதல், முன்னேற்றமடையச் செய்தல் போன்றவற்றுக்காக பசளை மற்றும் இயற்கை தயாரிப்புக்களை முன்னேற்றுங்கள். இயற்கை வழிமுறைகளின் ஊடாக கழிவுப் பொருட்களை சரியான முறையில் முகாமைத்துவப் படுத்துங்கள்.

**சவால்கள்**

- சிறந்த விவசாயம் சார்ந்த சடங்குகள் மற்றும் சிறந்த நில உருவாக்க முகாமைத்துவத்திற்கு தூண்டுதல்.

- ஒவ்வொரு நீர்த்துளியும் பெருமதிமிக்கது என நினைத்து, நீர் வீண்விரயம் செய்யப்படுவதை தடுத்தல்.
- நீரின் வீண்விரயத்தை தடுக்கும் ஆலோசனைகள் மற்றும் தொடர் விழிப்புணர்வினை வழங்குதல்.

**முன்னெடுத்தல்**

1. நீரேந்தும் பகுதிகளில் நீர் வற்றிவிடாமல் தடுப்பதற்கு தொடர்ந்தும் மரங்களை வளர்த்தல்.
2. நதிகள், நீரோடைகளின் இருபுறங்களிலும் மரங்களை வளர்த்தல்.
3. சிக்கனமான நீர் உபயோகத்திற்கு குளித்தல், ஆடை கழுவுதல், வாகனங்களை கழுவுதல், நீர் ஊற்றுதல் போன்ற விடயங்களின் போது நீரை கவனமாக உபயோகித்தல்.
4. பழுதடைந்த நீர் வடிமுனை மற்றும் நீர்த்தாங்கிகளை பழுதுபார்த்து உபயோகப்படுத்தல்.

**குறிக்கோள் - 2b**

நீர் மாசடைவதை குறைத்தல்

**சவால்கள்**

- வீண்விரயமாகும் நீரை நேர்த்தியாக உபயோகித்தல்.
- திண்மக் கழிவுகளை சரியான முறையில் முகாமைத்துவப்படுத்தல்.
- இரசாயனப் பொருட்கள் மற்றும் கழிவுகள் நீர் ஒழங்கு முறைகளுக்கு வழிந்தோடுவதை தடுத்தல்.

வீட்டில் பயன்படுத்தப்படும் நீரை (நச்சுத் தன்மை கலக்கப்படாத) மீண்டும் உபயோகப்படுத்தல் உ+ம் வீட்டுத்தோட்ட பாவனை

**முன்னெடுத்தல்**

1. வெளியேற்றப்படும் நீரை சுத்தமான நீருடன் கலக்காமல் வாய்க் காலுக்கோ அல்லது அதற்காக வெட்டப்பட்டிருக்கும் குழிக்கோ வழிந்தோடச் செய்தல்.
2. இரசாயன கழிவுப் பொருட்கள், குப்பைகள் நீரோட்டத்தில் கலக்காமல் தடுத்தல். (நீரோடை மற்றும் நதிகள்)
3. பிளாஸ்டிக் போத்தல்களை நதிகள், குளம், கடலுக்கு வீசி எறியாமல் மீள் சுழற்சி செய்தல்.



## தொகுதி - B

## மறை மாவட்ட சுற்றாடற் கொள்கை, குறிக்கோள், திட்டமுறைமைகள், சவால்கள் மற்றும் முன்னெடுத்தல்

**குறிக்கோள் - 1**

மக்களின் ஆரோக்கிய நலனுக்காக காற்றின் தூய்மை பாதுகாக்கப்படுதல்.

**திட்டமுறைமை - 1a**

காற்றின் தூய்மையை பாதுகாப்பதற்கான மரவளர்ப்பு.

**சவால்கள்**

- பிரதேசத்திற்கு பொருத்தமான மரபுரிமைக் கொண்ட மரநடுகை
- காடு அழிக்கப்படுவதைக் குறைத்தல்
- மரங்களின் ஆரோக்கியத் தன்மை பாதுகாக்கப்படுதல்
- இயற்கை சூழலில் உள்ள தாவரங்கள், மரங்கள் மற்றும் வளத்தினை பாதுகாத்தல்.

**முன்னெடுத்தல்**

1. பாரிய மரங்களை பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.
2. தாவர வகைப்படுத்தலுக்கு அமைய கன்றுகள் மற்றும் மரங்களை வளர்த்தல்.(ஈர வலயம், உலர் வலயம் மற்றும் ஏனையவை)
3. குறிப்பிட்ட மழை காலங்களில் வளர்ந்த மரங்களை கவ்வாத்துப் பண்ணுதல் மற்றும் குறிப்பிட்ட நேரத்துக்கு சேதன பசளை இடுதலின் மூலம் மரங்களை ஆரோக்கியமாகப் பேணுதல்.
4. மரங்களை வெட்டி அகற்றுவதற்கு முன்னர் அந்த இடத்தில் மீண்டும் ஒரு மரக்கன்றினை நட்டி ஐந்து அடி வளர்ந்த பின்னர் பழைய மரத்தை அகற்றுவது ஏற்புடையதாகும்.
5. மறைமாவட்ட அதிகாரத்திற்கு உட்பட்ட நிலங்களிலுள்ள பாரிய மரங்களை வெட்டுவதற்கு முன்னர் சுற்றாடல் செயற்குழுவின் ஆலோசனை மற்றும் அனுமதியினை பெற்றுக் கொள்ள வேண்டும். மறைமாவட்ட காணிகளை விற்பனை செய்வதற்கு முன்னர் நிலையியற் செயற் குழுவின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**திட்டமுறைமை - 1b**

சூழலுக்கு விடுவிக்கப்படுகின்ற மாசடைந்த காற்றை கட்டுப்படுத்துதல், அவற்றை சூரிய சக்தி மின்சாரம் தயாரிக்க உபயோகப்படுத்திக் கொள்ளுதல்.



**சவால்கள்**

- வாயு மண்டலத்துக்கு விடுவிக்கப்படும் நச்சுத் தன்மையை கட்டுப்படுத்துதல் மற்றும் கழிவுப் பொருட்களை எரிவூட்டுதலின் மூலம் வாயு மண்டலத்துக்கு விடுக்கப்படும் நச்சுத் தன்மையை கட்டுப்படுத்தல்.
- காபனீரொட்சைட் மற்றும் மொஹோஸ்சைட் தயாரிப்பினை குறைத்தல்.
- நிலக்கரி உபயோகம் சுற்றாடலை பாதிக்கின்றது. (மின் உற்பத்தியின் போது) சூரிய மின்சக்தி சுற்றாடலுக்கு ஏற்றதாகும்.

**முன்னெடுத்தல்**

1. இரசாயனத் திரவம் தெளிப்பதை தவிர்த்தல்.
2. காடுகளை தீயிடுதல் மற்றும் கழிவுப் பொருட்களை எரித்தல் மூலம் ஏற்படும் புகையை தடுத்தல்.
3. சூழலுக்கு விடுவிக்கப்படும் வாகனப் புகையை குறைப்பதற்காக நடைப் பயணம்,
   மிதி வண்டி உபயோகம், அண்மையில் வசிக்கும் சபை அங்கத்தவர் ஒருவரின்
   ஒத்துழைப்புடன் ஒரே வாகனத்தில் ஆலயத்திற்கு வருகை தருதல்.
4. ஆலயம், குருமனை, பாடசாலை மற்றும் ஏனைய நிறுவனங்களில் சூரிய சக்தியிலான மின்னினை அதிகம் உற்பத்தி செய்ய ஆவண செய்யப்படுதல்.

**குறிக்கோள் - 2**

குறைவில்லாமல் தொடர்ந்தும் சுத்தமான நீரை வழங்குதல்.

**திட்டமுறைமை - 2a**

நீர் தோற்றுவாய் பகுதிகளை பேணிப் பாதுகாப்பதன் மூலம் கிடைக்கும் நீரை சிக்கனமாக உபயோகப்படுத்துதல்.

**சவால்கள்**

- நீரேந்தும் மற்றும் நீர்த் தோற்றுவாய் பகுதிகளை அடையாளம் காணுதல். ஊற்றுக்கள், நீரோடைகள், ஆறுகள் மற்றும் கிணறுகள் (நீர் வீழ்ச்சி)
- குறைந்தளவிலான நீர் உபயோகம்.